# அருணை முரசு


தமிழ் மாத இதழ்

ARUNAI MURASU Tamil Monthly

மலர்: 8 இதழ்: 10 செப்டம்பர் 2025 விலை : ₹5 சென்னை

Volume: 8 Issue: 10 SEPTEMBER 2025 Price : ₹5 Chennai


## ஜெர்மனியில் ரூ.3,819 கோடிக்கு 23 ஒப்பந்தங்கள் கையெழுத்து




SPINAL
CURE
இல்லத்தரசிகளே!
குடும்ப ஆரோக்கியம்
இனி உங்கள் கையில்
Qualifications
• 12TH or EQUIVALENT
• ANY DEGREE
CASMA
CLASSICAL ACUPUNCTURE SCIENCE
Diploma and certification courses
CASMA
CERTIFICATION
BSS- NDA.GVT.OF INDIA DELHI
WORLD SKILL COUNCIL LONDON
WITH -CASMA
Courses:
• ADVANCE DIPLOMA IN ACUPUNCTURE
• DOCTOR OF MEDICINE IN ACUPUNCTURE
மருந்து ( Without Medicine ), அறுவை சிகிச்சை ( Without Surgery ), மற்றும் உணவு கட்டுப்பாடு ( Without Diet Restriction ), இல்லாமல் நோய்களை எளிதில் குணப்படுத்துவது எப்படி என்பதை நீங்கள் எளிதாகக் கற்றுக்கொள்ளலாம்.
ADMISSION GOING ON
Language: Tamil / English
Prof. Healer R.BASHEER BASHA
BSC., M.DIPLOMA IN (ACU) BSS, M.DIPLOMA IN CLASSICAL (ACU) JSS, DOCTOR OF MEDICINE ACUPUNCTURE MD (ACU) OIUCM, (COLOMBO SRI LANKA), GENERAL SECRETARY, CASMA
+91-81480 38363/ 90876 28476
424/797 , kola Perumal School Street, P.H.Road
Arumbakkam, Chennai -600106 (Near DG Vaishnav College)


தாய்மொழி தமிழில்
கிளாசிக்கல் அக்குபஞ்சர் அறிவியலை
பயின்று பயிற்சி பெற விருப்பமா?
CASMA
Without medicine
without surgery
without diet
You can recover yourself with classical acupuncture science.
( Full Details- check Description )
Qualifications
• 12TH or EQUIVALENT
• ANY DEGREE
1 Year Course
CLASSICAL ACUPUNCTURE SCIENCE
Certification
BSS- NDA.GVT.OF INDIA DELHI
WORLD SKILL COUNCIL LONDON
WITH -CASMA
Language: Tamil / English
ADMISSION GOING ON
WhatsApp For Registration
+91-81480 38363/ 90876 28476
ARUMBAKKAM, CHENNAI
SPINAL
CURE

நீதியின் நிலைக் கண்ணாடி
உண்மை செய்தியின் முன்னோடி

**அருணை முரசு**

மாதஇதழ்

ஆண்டு- 8 இதழ்- 10 செப்டம்பர் - 2025

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,M.A.,Ph.D.,(Hons)
State President ALL INDIA SMALL NEWSPAPERS ASSOCIATION

பொறுப்பாசிரியர்: M. ஸ்ரீராம்

ஆசிரியர் குழுக்கள்
சிவயோகி மவுரியன்,
V. அருணாச்சலம்

இதழியல் ஆலோசகர்
P. ஆறுமுகம், B.Sc.,A.E.M.S.A.C.,
Retd. Sr. Audit Officer, Scientific Department
(C&AG of India) New Delhi.

நிருபர்கள்
K.L.ராஜேந்திரன், S. ஏழுமலை,
S. நிவேதிதா, Dr.K.ராஜமாணிக்கம்,
இர்வின், கனகதுர்கா,
அகிலாண்டேஸ்வரி, குருதேவ்

சட்ட ஆலோசகர்கள்
M.குணசீலன், B.Com.,M.L.,
M. சுதாகர், B.Sc.,B.L.,
பி.கே.தனஞ்செயன், M.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : S அருணாசலா

வடிவமைப்பு:
GRACE DESIGNS : 9940211538

நிர்வாக அலுவலகம்
**அருணை முரசு**
# 6/56 Annamalai Nagar. 1st Street
Mettupalayam westmampalam chennai - 600033
Email : arunaimurasu@gmail.com,
www.arunaimurasu.com
Cell : 93821 33334,

தலைமை அலுவலகம்
எண்.21/12, 2-வது லேண்ட் பீச்,
ஹோட்டல் டாப்-பார்ம், நடராஜ் பில்டிங்
முதல் மாடி, ஜார்ஜ் டவுன்,
சென்னை - 600 001.



● அருணை முரசு பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும், சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

● நமது அருணை முரசு இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரைகள் மற்றும் செய்திகளில் வெளியாகும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.


## தலையங்கம்

# தங்கநகைகளின் விலை உயர்வு

ஒரு டாலருக்கு ரூ.88 என வரலாறு காணாத அளவில் இந்திய ரூபாய் சரிந்துள்ளது. வழக்கமாக உலக நாடுகள், தங்களிடம் கையிருப்பில் உள்ள தங்கத்தை வைத்து கரன்சியை அச்சடிப்பார்கள். ஆனால் உலக நாடுகள் டாலரில் வர்த்தகம் செய்வதால் அமெரிக்கா, எந்த கணக்குமின்றி டாலரை அச்சடித்து வர்த்தகம் செய்கிறது. இதனால் உலகம் முழுவதும் உள்ள பெரிய வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடாக கருதுவதால் தொடர்ந்து தங்கத்தை வாங்கி குவிக்கிறார்கள். இதனால் தங்கத்திற்கான தேவை அதிகரித்துள்ளது. இதுவே விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது.

சாதாரண மக்களை பொருத்தவரை தங்கம் என்பது ஒரு முதலீடு மட்டும் கிடையாது. அவசர பண தேவைக்கு உடனடியாக அடகு வைத்து பணமாக மாற்றக்கூடிய ஒரு பொருள். நடுத்தர குடும்பங்களுக்கு அவசர பண தேவை ஏற்பட்டால் உடனடியாக வங்கிகளிலோ அல்லது நிதி நிறுவனங்களிடமோ தங்கத்தை அடகு வைத்து பணமாக மாற்றிக் கொள்வார்கள்.

தனிநபர் கடன், வீட்டுக்கடன், கிரெடிட் கார்டு உள்ளிட்டவற்றுடன் ஒப்பிடும்போது, நகையை அடகு வைத்து கடன் வாங்குவது எளிமையானதாக இருக்கிறது. அந்த வகையில் இந்தியாவில் மற்ற கடன்களோடு ஒப்பிடும்போது 2025ம் ஆண்டில் தங்கத்தின் மீது கடன் வாங்கும் போக்கு அதிகரித்து இருக்கிறதாம். 2025 மார்ச் மாதம் நிலவரப்படி இந்தியாவில் தங்க நகைகளின் மீது வாங்கப்பட்டிருக்கும் கடன்களின் மொத்த மதிப்பு ரூ.2.08 லட்சம் கோடி. இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 1.3 லட்சம் கோடி ரூபாயாகத்தான் இருந்தது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஜெர்மனியில் முதலீட்டாளர்கள் மாநாடு

## ரூ.3,819 கோடிக்கு 23 ஒப்பந்தங்கள் கையெழுத்து




ஜெர்மனியில் நடைபெற்ற முதலீட்டாளர் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ரூ.3,819 கோடி மதிப்பிலான 23 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

முதல்வர் ஸ்டாலின் ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக சென்றுள்ளார். ஜெர்மனியில் நேற்று முன்தினம் ஸ்டாலின் தலைமையில் ‘டி என் ரைசிங் யுரோப்’ முதலீட்டு இயக்கத்தின் ஒரு பகுதியாக, ‘டி என் ரைசிங் ஜெர்மனி’ முதலீட்டாளர் மாநாடு நடைபெற்றது.

இதில், முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ரூ.3,819 கோடி மதிப்பிலான 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன் மூலம் தமிழகத்தில் 9,070 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

ஜெர்மனியில் மொத்தம் 26 ஒப்பந்தங்களின் மூலம் ரூ.7,020 கோடி அளவுக்கு முதலீடு கிடைத்துள்ளது. இதனால் 15,320 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகி உள்ளது. தமிழகத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் பல முன்னணி நிறுவனங்கள் விரிவாக்கப் பணிகளுக்கான முதலீட்டுக்கு முன்வந்துள்ளன.

இந்த மாநாட்டில் வென்சிஸ் எனர்ஜி (ரூ.1,068 கோடி), பிஏஎஸ்எஃப் (ரூ.300 கோடி), பெல்லா பிரீமியர் ஹேப்பி ஹைஜீன் (ரூ.300 கோடி), ஹெர்ரென்க்னெக்ட் இந்தியா (ரூ.250 கோடி), பல்ஸ் (ரூ.200 கோடி),




விட்செண்மேன் இந்தியா (ரூ.200 கோடி) மற்றும் மாஷ் எனர்ஜி (ரூ.200 கோடி ) ஆகிய முக்கிய நிறுவனங்கள் முதலீட்டுக்கு ஒப்பந்தம் செய்துள்ளன.

பிஎம்டபிள்யு நிறுவனத்தின் மூத்த தலைவர்களுடனான சந்திப்பின்போது, ஆட்டோ மொடிவ் மற்றும் மின்சார வாகன உற்பத்தியில் தமிழகத்தின் பங்கை எடுத்துரைத்து, பிஎம்டபிள்யூ நிறுவனம் அதன் செயல்பாட்டை தமிழகத்தில் அதிகப்படுத்த வேண்டுமென முதல்வர் ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

ஜெர்மனியின் இரட்டை தொழில் பயிற்சி மாதிரியை தமிழகம் கொண்டு வருவதற்காக நெக்ஸ்ட் மிட்டல்ஸ்டாண்ட் (ஆஸ் பில்டங்) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 120 மாணவர்களுடன் தொடங்கும் இத்திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் 20,000 மாணவர்களாக உயரும்.

தொடர்ந்து, இங்கிலாந்து நாட்டுக்கு சென்ற முதல்வர் ஸ்டாலின், பல முதலீட்டாளர்கள் மற்றும் இங்கிலாந்து வாழ் தமிழர்களை சந்தித்தார். இந்நிகழ்வுகளில், அமைச்சர் டிஆர்பி. ராஜா, தொழில் துறைச் செயலர் வி.அருண்ராய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


புதிய வளர்ச்சிப் பாதை: ஜெர்மனியில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: இந்தியாவிலேயே அதிகமான இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியையும், உற்பத்தித் துறை வளர்ச்சியையும் அடைந்திருக்கும் ஒரே மாநிலம் தமிழகம்தான். 48 சதவீதம் நகர்மயமான, அதிக தொழிற்சாலைகளும், பணியாளர்களும் இருக்கக்கூடிய மாநிலமும் தமிழகம்தான்.

ஜெர்மனியைப்போல தமிழகத்துக்கும் பெரிய வரலாறு, பாரம்பரியம் உள்ளது. தமிழும், ஜெர்மனும் உலகின் பழமையான மொழிகளில் முக்கியமானவை. இப்படிப்பட்ட மாநிலத்தில் தொழில் தொடங் உங்களை எல்லாம் அழைக்கிறேன்.

ஜெர்மனியின் பண்பாடு, தொழில் நுணுக்கம், புத்தாக்க வலிமை போன்றவை வியப்பை

ஏற்படுத்துகின்றன. தமிழகத்தில் தற்போது பல ஜெர்மனி நிறுவனங்கள் தொழில் நடத்தி வருகின்றன. 'மேட் இன் ஜெர்மனி'யை எப்படி தரத்தின் அடையாளமாக உலகம் முழுவதும் பார்க்கிறார்களோ, அப்படி 'மேட் இன் தமிழ்நாடு' என்பதும் தரமும், திறனும் கொண்ட பெயராக உருவாகிக் கொண்டிருக்கிறது. சைக்கிள் முதல் டாங்குகள் வரை நாங்கள் தயாரித்து வருகிறோம்.

ஜெர்மனி எப்படி ஐரோப்பிய யூனியனின் முக்கிய தொழில்துறை நாடோ, அதேபோல இந்தியாவில் தொழில்துறையின் இதயத் துடிப்பாக தமிழகம் திகழ்கிறது.



முன்னணி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், 54 லட்சம் குறு, சிறு நிறுவனங்கள், 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் இருக்கும் தமிழகத்துக்கும், ஜெர்மனிக்கும் இடையே உள்ள பொருளாதார உறவு மூலமாக, தற்போதுள்ள நட்பை இன்னும் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

ஜெர்மனி நிறுவனங்கள் உட்பட 130க்கும் மேற்பட்ட 'ஃபார்ச்சூன் 500' நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் திட்டங்களை நிறுவியதே, தமிழகத்தில் முதலீட்டுக்கான சிறந்த சூழல் நிலவுவதற்கு சான்றாகும்.

உலகளவில் நீங்கள் சிறந்து விளங்கும் ரோபோடிக்ஸ், மூலதனப் பொருட்கள் மற்றும் புத்தாக்கம் போன்ற துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். திறன் மேம்பாட்டில் ஜெர்மனியைப்போல, தமிழகமும் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. உங்களது பயிற்சி நுணுக்கங்களும், நுட்பங்களும் எங்களுக்கு பெரிதும் ஊக்கமளிக்கின்றன.

தொழில் மற்றும் தொழில்நுட்பத்தில், ஜெர்மனியின் துல்லியத்தையும், தமிழகத்தின் ஆற்றலையும் இணைத்தால், உலக அளவில் புதிய வளர்ச்சிப் பாதையையும், ஐரோப்பா மற்றும் ஆசியா இடையே வலுவான வர்த்தகப் பாலத்தையும் நம்மால் உருவாக்க முடியும்.

தமிழகத்தில் தொழில் தொடங்க வரும் முதலீட்டாளர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய தமிழக அரசு காத்திருக்கிறது. எனவே, உங்களுடைய முதலீடுகளை தமிழகத்தில் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

வடக்கு ரைன் வெஸ்ட்பாலியா: ஜெர்மனி பயணத்தின் ஒரு பகுதியாக, அந்நாட்டின் வடக்கு ரைன் வெஸ்ட்பாலியா அமைச்சரும், அதிபருமான ஹென்ட்ரிக் வுஸ்ட்டை முதல்வர் ஸ்டாலின் நேற்று சந்தித்து பேசினார். அப்போது, மின்சார இயக்கம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தொழில் 4.0, இரட்டை தொழில் பயிற்சி, மேம்பட்ட உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு போன்ற துறைகளில் இரு மாநிலங்களின் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

தமிழகத்தின் திறமையான மற்றும் படித்த இளைஞர்கள், ஜெர்மனியின் மனிதவளத்தில் பங்களிக்க வழிவகை செய்வது குறித்தும் முதல்வர் விவாதித்தார். மேலும், ஹென்ட்ரிக் வுஸ்ட், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் குழுவை தமிழகம் வரும்படி முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்தார்.



# டெட் தேர்வு விவகாரம்: ஆசிரியர்களை தமிழக அரசு ஒருபோதும் கைவிடாது

## அன்பில் மகேஸ் உறுதி

ஆசிரியர் தகுதித் தேர்வு விவகாரத்தில், ஆசிரியர்களை தமிழக அரசு எக்காரணம் கொண்டும் கைவிடாது என தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் 20 அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக அண்மையில் தரம் உயர்த்தப்பட்டன. இதில், திருச்சி கே.கே. நகரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியும் ஒன்று. இந்நிலையில், இப்பள்ளியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வகுப்புகளை நேற்று தொடங்கி வைத்து, பள்ளியில் சேர்ந்த மாணவர்களை வரவேற்று புத்தகம், பேனா ஆகியவற்றை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் கூறியது: தற்போது பணியில் உள்ள ஆசிரியர்கள், டெட் எனப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வை எழுதி கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. உச்ச நீதிமன்ற தீர்ப்பின் விவரம் முழுமையாக கிடைத்தவுடன் அதுகுறித்து சட்ட வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து, பின்னர் மேல் முறையீடு செய்யப்படும்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக ஆசிரியர் சங்கங்களும் மேல் முறையீடு செய்ய வாய்ப்புள்ளது. அதேவேளையில், எக்காரணத்தைக் கொண்டும் ஆசிரியர்களை தமிழக அரசு கைவிடாது. இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில், எம்எல்ஏ இனிகோ இருதயராஜ், மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் மு.மதிவாணன், பள்ளித் தலைமை ஆசிரியை எலிசபெத் ராணி மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் பங்கேற்றனர்

செமிகான் இந்தியா மாநாட்டை டெல்லியில் தொடங்கிவைத்த பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவின் மிகச்சிறிய சிப் விரைவில் உலகின் மிகப் பெரிய மாற்றத்தை இயக்கும் என தெரிவித்தார்.

இந்தியாவில் குறைக்கடத்தி உற்பத்தியை வளர்ச்சியடையச் செய்யும் வகையில் செமிகான் இந்தியா 2025 மாநாடு புதுடெல்லியில் இன்று தொடங்கியது. இன்று முதல் வரும் 4ம் தேதி வரை 3 நாட்களுக்கு நடைபெறும் இந்த மாநாட்டை தொடங்கிவைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, “இந்தியா வலுவான பொருளாதார அடித்தளத்தைக் கொண்டுள்ளது. கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி

# இந்தியாவின் மிகச்சிறிய சிப் உலகில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்



வளர்ச்சி 7.8% ஆக பதிவாகி உள்ளது. மற்ற பொருளாதாரங்கள் நிச்சயமற்ற தன்மையுடன் போராடிக் கொண்டிருக்கும் சூழலில், இந்த வளர்ச்சியை இந்தியா பதிவு செய்துள்ளது.

உற்பத்தி, சேவை, விவசாயம், கட்டுமானம் என அனைத்துத் துறைகளிலும் காணப்படும் வளர்ச்சி, உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் என்ற நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

கச்சா எண்ணெய் கருப்புத் தங்கம் என அழைக்கப்படுவதுபோல், டிஜிட்டல் டைமண்ட் என குறைக்கடத்தி சிப்கள் அழைக்கப்படுகின்றன. கச்சா எண்ணெய் 20ம் நூற்றாண்டை வடிவமைத்ததுபோல, குறைக்கடத்திகள் 21ம் நூற்றாண்டை வடிவமைக்கும். 600 பில்லியன் டாலர் மதிப்புள்ள உலகலாவிய குறைக்கடத்தி சந்தை வரும் ஆண்டுகளில் ஒரு ட்ரில்லியன் டாலரைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சந்தையில் குறிப்பிடத்தக்க பங்கைப் பெறுவதில் இந்தியா உறுதியாக உள்ளது.

செமிகான் இந்தியா நிகழ்ச்சிகள் கடந்த 2021ல் தொடங்கப்பட்டன. இதன்மூலம் ஏற்கனவே 18 பில்லியன் டாலருக்கும் அதிக முதலீட்டை இந்தியா ஈர்த்துள்ளது. மேலும் பல சிப் நிறுவனங்களுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. சிஜி பவர், கெய்ன்ஸ், மைக்ரான், டாடா போன்ற நிறுவனங்கள் இந்த துறையில் தங்கள் பயணத்தை தொடங்கி உள்ளன. நமது பயணம் தாமதமாக தொடங்கி இருக்கலாம், ஆனால் எதுவும் நம்மை தடுக்க முடியாது. இந்தியாவின் மிகச்சிறிய சிப், உலகின் மிகப் பெரிய மாற்றத்தை இயக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை

உலகம் இந்தியாவை நம்புகிறது. இந்தியாவுடன் சேர்ந்து குறைக்கடத்தியின் எதிர்காலத்தை உருவாக்க உலகம் தயாராக இருக்கிறது. இந்தியாவில் வடிவமைக்கப்பட்டது, இந்தியாவில் தயாரிக்கப்பட்டது, உலகத்தின் நம்பிக்கை இதில் உள்ளது என்று சொல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை.'' என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் அஸ்வினி வைஷ்ணவ், ஜிதின் பிரசாதா, டெல்லி முதல்வர், ஒடிசா முதல்வர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த 3 நாள் மாநாடு குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் அலுவலகம், ''இந்த மாநாடு, இந்தியாவில் மேம்படுத்தப்பட்ட, விரைவான மற்றும் நீடித்த குறைக்கடத்தி சூழல் குறித்து கவனம் செலுத்தும். செமிகான் இந்தியா திட்டம், குறைக்கடத்தி ஆலை மற்றும் மேம்பட்ட தொகுப்புத் திட்டங்கள், உள்கட்டமைப்பு தயார் நிலை, நவீன உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, செயற்கை நுண்ணறிவில் புதுமை கண்டுபிடிப்புகள், முதலீட்டு வாய்ப்புகள், மாநிலங்கள் அளவிலான கொள்கை அமலாக்கம் உள்ளிட்டவை குறித்த அமர்வுகள் நடைபெற உள்ளன. அத்துடன், இந்தியாவின் குறைக்கடத்தி துறைக்கான எதிர்கால திட்டம், சர்வதேச ஒத்துழைப்பு, புத்தொழில் சூழல் வளர்ச்சி ஆகியவற்றுக்காக வடிவமைப்புடன் கூடிய ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள் குறித்து எடுத்துரைக்கப்பட உள்ளன.

48க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த 2,500க்கும் மேலான பிரதிநிதிகள் 150க்கும் மேலான பேச்சாளர்கள், 50க்கும் அதிகமான உலகளாவிய தலைவர்கள், 350க்கும் மேலான கண்காட்சியாளர்கள் உள்ளிட்ட 20,740க்கும் அதிகமானோர் இதில் பங்கேற்க உள்ளனர். 6 நாடுகள் பங்கேற்கும் வட்டமேசை விவாதங்கள், செயல் திறன் மேம்பாடு மற்றும் புத்தொழில்களுக்கான நாடுகளின் அரங்குகள் உள்ளிட்டவை இடம் பெறவுள்ளன.

பல்வேறு நாடுகளில் ஏற்பாடு செய்யப்படும் குறைக்கடத்தி மாநாடுகள், குறைக்கடத்தித் துறையில் தொழில்நுட்ப முன்னேற்றங்களை அதிகளவில் சென்றடைவதையும், பல்வேறு தொழில்நுட்ப முன்னேற்றங்கள் நாடுகளின் குறைகடத்தி சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கான கொள்கைகளையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. குறைக்கடத்தி வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான மையமாக இந்தியாவை திகழச் செய்ய வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கின் அடிப்படையில் இம்மாநாடுகள் 2022ல் பெங்களூருவிலும், 2023ல் காந்தி நகரிலும், 2024ல் கிரேட்டர் நொய்டாவிலும் நடத்தப்பட்டன.'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனுமானின் கடல் தாண்டும் படல விஸ்வருப சிறப்பு



ஸ்ரீமத் வால்மீகி ராமாயணக் காவிய சுந்தரகாண்டத்தில் வரும் அனுமான் கடலை தாண்டும் படலத்தில் இராமாயண காவியத் தலைவன் ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் மனைவியான அன்னை சீதாதேவியை தேடி லங்கை செல்லும் அனுமான் ராமநாம மகிமையால் விஸ்வரூப வடிவம் கொண்டு கடலை கடக்கும் போது ஏற்பட்ட தடைகள் மூன்றாகும்.

சமுத்திர ராஜன் தன்னை உண்டாக்கிய ஸகரன் குலத்தை சேர்ந்த ஸ்ரீராமனுக்கு உதவி செய்வதாய் நினைத்து அவனின் தேவியை தேடிச் செல்லும் இராமனின் உதவியாளரான விஸ்வரூப அனுமான் சிறிது நேரம் தங்கி இளைப்பாறி செல்ல தன்னில் நிறைந்திருந்த மைநாக மலையை வெளியில் வர வைத்ததால் ஏற்பட்ட அன்பு (தடை) பிடியிலிருந்து அன்னை சீதாதேவியை காணும் வரை எனக்கு ஒய்வு , களைப்பு கிடையாது என மைநாக மலையிடம் விண்ணில் பறந்த வண்ணம் சொல்லி சென்றது

முதலாவது (அன்புத்) தடையை தகர்த்து அனுமான் கண்ட வெற்றியாகும்.

சூரியனுக்கு ஒப்பான நாகர் குல மாதா சுரசை தேவர்களின் வேண்டுகோளின் படி அனுமானின் பராக்கிரமத்தை உலகிலுள்ள அனைவரும் அறிய வேண்டும் எனும் நல்ல எண்ணத்துடன் கடல் வாழ் மிருகமான மகரயாளி வடிவம் கொண்டு விஸ்வரூப வடிவுடைய அனுமான் செல்லும் வான்வழியை தடுத்து உன்னை விழுங்கப் போகிறேன் என்றும் அதிலிருந்து தாங்கள் ஒரு முறை தப்பித்தால் போதும் பிறகு நான் உங்களை தடுக்க மாட்டேன் என்று சொல்லி தன் வாயினை திறந்தாள் சுரசை, அதனை கண்ட அனுமான் தனது விஸ்வரூபத்தை உயர்த்திக் கொண்டே செல்ல,செல்ல சுரசையும் தனது வாயினை பெரிதாக்கி கொண்டே சென்றாள் திடீரென்று அனுமான் தனது உடலை கட்டை விரல் அளவுடையதாக மாற்றிக் கொண்டு சுரசையின் வாயில் புகுந்து வெளியில் வந்தார், இதனை கண்ட சுரசையும் தன் தந்த வாக்கின் படி அவரை மனதார வாழ்த்தி இராமதூதனுக்கு விடை தந்தாள் என்பது அனுமான் தனக்கு ஏற்பட்ட இரண்டாவது தடையை தகர்த்து கண்ட வெற்றியாகும்.

கடலில் வாழ்ந்து வருபவளும் நினைத்த மாத்திரத்தில் நினைத்த வடிவம் எடுக்கும் சக்தி உடையவளுமான ஸிம்ஹிகா எனும் அரக்கி தனது கோரப் பசியின் காரணமாக விண்ணில் பற(ய்)ந்து செல்லும் விஸ்வரூப வாயு புத்திரனின் நிழலை பற்றி இழுக்க தொடங்கினாள், தனது பலம், பலவீனம் ஆவது யாரால் என அனுமான் கீழே பார்த்தார் அங்கே உப்புக் கடலில் எழுந்து நிற்கும் விகாரமான முகத்தை உடைய பெரிய பிராணி இருப்பதை கண்டார் இது வானர மன்னர் சுக்ரீவனால் சொல்லப்பட்ட மிக்க வீர்யமுள்ள விசித்திரமான பிராணி சாயாக்ராஹி அல்லவா என எண்ணினார், அரக்கி ஸிம்ஹிகா தனது கொடுமையான பசியினால் விஸ்வரூப அனுமானை உண்ண தனது குகை போன்ற வாயை திறக்க அதில் வஜ்ராயுதம் போல் மிக வேகமாக விஸ்வரூபத்துடன் அனுமான் பாய்ந்து அவளின் வயிற்றை கிழித்துக் கொண்டு வெளியில் வந்து, விண்ணில் பறந்தது ஸ்ரீராமபிரானின் தேவியை தேடும் பணியை தொடர்ந்தான் என்பதும், அரக்கி ஸிம்ஹிகா வானர வீரன் அனுமானின் திருக்கரங்களால் வதம் செய்யப்பட்டதால் அவள் பிறப்பின் சாபம் நிவர்த்தி அடைந்து விண்ணுலகம் சென்றாள் என்பதும் வால்மீகி இராமாயணம் சொல்லும் வரலாறு . இது அனுமான் தனக்கு ஏற்பட்ட மூன்றாவது தடையை தகர்த்து கண்ட வெற்றியாகும்.

( அரக்கி ஸிம்ஹிகாவின் மாய வடிவம் முதலையாக இருக்கலாம் என்பது என்னை போல் உள்ள சில சிற்ப ஆய்வாளர்களின் கருத்தாகும்)

இக்கட்டுரையுடன் வந்துள்ள தாங்கள் காணும் மிக அரிதான சிற்பங்கள் அமையப்பெற்றுள்ள கோவில்கள் வால்மீகி இராமாயணத்தில் வரும் கடல் தாண்டும் படலத்தில் முதல் தடை அன்புத்தடை அது மைநாகமலையால் வருவது இந்த காட்சியுடைய





சிற்பங்கள் பல கோவில்களில் உள்ளது ஆதலால் அதனை இங்கு பதியவில்லை , இரண்டாம் தடையாக வரும் நாகமாதா சுரசை கடல் மிருக மகரயாளியாகவும் அதன் வாயில் இருந்து தப்பிக்கும் வண்ணம் அனுமான் எழுந்தருளியுள்ள காட்சியுடைய சிற்பம் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவிலிலும் மற்றொன்று பெங்களூர் கலசிப்பாளையத்திலும் உள்ளது, மூன்றாம் தடையான

முதலை வயிற்றைக் கிழித்து கொண்டு அனுமான் வெளிவரும் காட்சியுடைய சிற்பங்கள் திருச்சி மாவட்டத்தில் திருவரங்கம், திருவானைக்கா மற்றும் சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் ஆகிய கோவில்களிலும் உள்ளது " குறிப்பிடத்தக்கதாகும்.

முதலை வயிற்றை கிழித்து கொண்டு வெளி வரும் விஸ்வரூப அனுமான் சிற்பத்தின் விளக்கத்தை கர்நாடகா மற்றும் ஆந்திராவில் வலம் வரும் அத்யாத்ம

இராமயண காவிய புராணம் இப்படி விவரிக்கிறது,

உலக புகழ் பெற்ற திருச்சி திருவரங்கம் கோவிலில் பல வரலாற்று சிற்பங்கள் இருந்தாலும் இதில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் சிற்பம் முதலை வயிற்றை கிழித்துக் கொண்டு அனுமன் வெளி வருவது போலவும் அருகில் ஒர் மங்கை வடிவம் வணங்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள சிற்பமாகும்.

அத்யாத்ம இராமயண காவிய யுத்த காண்டத்தில் இந்திரசித்துக்கும், இலட்சுமணனுக்கும் இடையே நடைபெற்ற போரில், இந்திரசித் ஏவிய மின்னல் அஸ்திரத்தால், இலட்சுமணன் மூர்ச்சையாகி மயங்கி வீழ்ந்தார். இலட்சுமணனைக் காக்க, வழி என்னவென்று விபீடணன் வினவ இலங்கை மருத்துவர் சுசேனர் இமயமலையில் வளரும் சஞ் சீவினி எனும் மூலிகை மருந்துச் செடிகளைப் பறித்து வந்து தந்தால் பூரண நலம் பெறுவார் என்று சொல்ல உடனே அதனை பறிக்க விஸ்வரூபத்துடன் அனுமான் புறப்பட்டார்

அவரைக் கொல்ல காலநேமி என்ற பாம்பு அசுரனை இந்திரசித் அனுப்பி வைக்கிறார்.

(அத்யாத்ம இராமாயணத்தில் கூறப்படும் காலநேமி, ஆரண்ய காண்டத்தில் மாய மானாக வரும் மாரீசனின் மகன் ஆவார்.)

அனுமார் இமயமலையின் கந்தமாதன மலை எனும் துரோண கிரியை அடைந்து, சஞ்சீவினிச் செடிகளைப் பறிக்கையில், அவ்விடத்தில் போலித் துறவி வேடத்தில் வந்த காலநேமி, அனுமாரை வரவேற்று, அருகில் உள்ள ஏரியில் குளித்து விட்டு வந்தால் சஞ்சீவினி செடிகளைப் எடுத்து செல்லலாம் என கூறுகிறார். அதனை ஏற்ற அனுமார் ஏரியில் நீராடும் போது காலநேமி அரக்கன் ஏவிய மாய முதலை, அனுமாரைக் விழுங்கி விட அனுமார் அம்முதலையின் வயிற்றை கிழித்து கொண்டு வெளியில் வந்து அதனை கொல்கிறார்.

அனுமார் கரங்கள் பட்டு இறந்த முதலை தான்யமாலி எனும் தேவலோக அழகியாக மாறினாள். அவள் தான் ஒரு முனிவரால் சாபம் பெற்ற வரலாற்றைக் கூறி தங்களுடைய உயர்ந்த ராம பக்தியினால் இன்று நான் பெற்ற சாபம் நிவர்த்தி அடைந்தேன் எனக் கூறி தங்களை நீராடச் சொன்ன முனிவர் ஒரு போலி என்றும், உண்மையில் அவன் நாக அரக்கன் காலநேமி என்பதை சொல்லி காலநேமியைக் கொன்று, விடிவதற்குள் சஞ்சீவினிச் செடிகளை பறித்து செல்லுங்கள் என கூறிவிட்டு அவள் தேவ லோகம் சென்றாள். அனுமானும் அவள் சொல்லியது போல் காலநேமியைக் கொன்று, சஞ் சீவினிச் செடிகளுடன் கூடிய மலைக்குன்றைத் தூக்கிக் கொண்டு, இலங்கை திரும்பி, இலக்குவனைக் காக்கிறார். என்பது அத்தியாத்ம இராமாயணத்தில் வரும் ஒரு படலமாகும்.

கன்னடா,ஆந்திரா மாநிலங்களில் உலா வரும் இந்த அத்தியாத்ம இராமயணத்தின் படி

காலநேமி கதைப்பாத்திரம், வால்மீகி எழுதிய மூல இராமாயணத்தில் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கலைமிகு சிலை,சிற்பங்களை ரசிப்போம், அதனை பாதுகாக்க முயற்சிப்போம்.

# திமுக அரசின் தோல்வியை மறைக்க எதற்கெடுத்தாலும் மத்திய அரசு மீது பழிபோடுகிறார் ஸ்டாலின்



திமுகவின் தோல்வி மாடல் ஆட்சியில், தமிழ்நாடு கெட்டுக் குட்டிச் சுவரானதை மறைக்க, எதற்கெடுத்தாலும் மத்திய அரசு மீது முதல்வர் மு.க. ஸ்டாலின் பழிபோடுகிறார் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பொறுப்பைத் தட்டிக்கழிப்பதிலும், அதை அடுத்தவர்கள் தலையில் ஏற்றி வைப்பதிலும், உலக அரசியல் தலைவர்களிலேயே முதல் இடத்தை வகிப்பவர்தான் ஏமாற்று மாடல் அரசின் முதல்வர் ஸ்டாலின் என்பதை அவரே பல விதங்களிலும் நிரூபித்து வருகிறார்.

அமெரிக்க அரசு தற்போது உயர்த்தியுள்ள இறக்குமதி வரியால் பாதிப்படைந்துள்ள திருப்பூர் பின்னலாடைத் தொழிலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள் என்று பிரதமருக்கு, மு.க. ஸ்டாலின் அவரது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இன்றுவரை, இவர் ஜவுளி மற்றும் பின்னலாடைத் தொழில்களுக்கு ஏற்படுத்திய இடையூறுகள், பிரச்சனைகள் ஏராளம். அதனால், அந்தத் தொழில்கள் ஏற்கெனவே நலிவடைந்துள்ளன என்பதே உண்மை.

வணிக நிறுவனக் கட்டடங்களுக்கு 150 சதவீதம் வரி உயர்வுடன், ஆண்டுதோறும் 6 சதவீத சொத்துவரி உயர்வு. தொழில் நிறுவனங்களுக்கு பலமுறை கடுமையாக மின் கட்டணங்களை உயர்த்தியதுடன், கூடுதலாக பீக் ஹவர் கட்டணம்

உயர்வு மற்றும் நிலைக் கட்டணம் உயர்வு.

365 கிலோ பருத்தி பேலின் விலை 50 சதவீதத்திற்கும் கீழே குறைந்தபோதும், நூல் விலையில் ஸ்திரமற்ற தன்மை நிலவிய போதும், எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது. பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்க துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை.

வெளிநாட்டு சுற்றுப் பயணம் நான்கு முறை மேற்கொண்டும், கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இயங்கும் ஜவுளித் தொழிலுக்கு எந்தவிதமான வெளிநாட்டு முதலீடுகளையும் ஈர்க்காதது.

இந்நிலையில், உள்நாட்டு முதலீடும் பிற மாநிலங்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் வகையில் மத்தியப் பிரதேச முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், கோவை மற்றும் திருப்பூருக்கு நேரடியாக வருகை தந்து, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (ஜிணிகி), தென்னிந்திய ஆலைகள் சங்கம் (ஷிமிவிகி) மற்றும் இந்திய பருத்தி கூட்டமைப்பு (மிசிதி) ஆகியவற்றுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, மத்தியப் பிரதேசத்தில் பருத்தி வளர்ச்சி வாரியத்தை நிறுவிடவும், எக்ஸ்ட்ரா லாங் ஸ்டேபிள் (ணிலிஷி) பருத்தி உற்பத்தி மற்றும் பரப்பளவை அதிகரிக்கவும், மத்தியப் பிரதேசத்தின் ஆடைத் தொழிலுக்கான முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிப்பதோடு, ஆடை உற்பத்தி நிறுவனங்களின் வளர்ச்சியை எளிதாக்கவும், திறன் மேம்பாட்டு வசதிகளில் ஆலோசனை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் ஷிமிவிகி மற்றும் ஜிணிகி உடன் இணைந்து செயல்படும் வகையில் தமிழகத்தின் முதலீடுகள், வெளி மாநிலங்களுக்குச் செல்வதை வேடிக்கை பார்த்த அரசுதான் திமுக ஸ்டாலின் மாடல் ஃபெயிலியர் அரசு.

திமுக ஸ்டாலின் மாடல் ஃபெயிலியர் ஆட்சியில், மின் கட்டணம் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருவதாலும், கழிவு பஞ்சில் இருந்து தயாரிக்கப்படும் நூலிழைகளைப் பயன்படுத்தி காடா துணி, கலர் நூல்களில் போர்வை, மெத்தை விரிப்பு, லுங்கி, துண்டு, கால்மிதி உட்பட பல துணி வகைகளை தயாரிக்கப் பயன்படுத்தும் நூல்களை உற்பத்தி செய்யும் ளி.ணி எனப்படும் ஓப்பன் எண்ட் ஸ்பின்னிங் மில்கள், உற்பத்தி நிறுத்தப் போராட்டங்களை நடத்தின. இவர்களின் கோரிக்கைகளை விடியா திமுக ஸ்டாலின் மாடல் ஃபெயிலியர் அரசு கண்டுகொள்ளவே இல்லை.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில், குறிப்பாக கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் ஸ்பின்னிங் மில்கள், ஓப்பன் எண்ட் ஸ்பின்னிங் மில்கள் அதிக




அளவில் உள்ளன. இந்த மில்கள் தமிழக மக்களுக்கு மட்டுமின்றி, பல லட்சக்கணக்கான வட மாநில மக்களுக்கும் அதிக அளவில் வேலை வாய்ப்புகளை வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதாரமாக விளங்கி வருகின்றன.

ஆனால், விடியா திமுக ஸ்டாலின் மாடல் ஃபெயிலியர் அரசு, ஆட்சிப் பொறுப்பேற்றது

முதல் வரிகளை உயர்த்தியும், அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களை உயர்த்தியும், தொழில் முனைவோர்களையும், தொழிற்சாலைகளையும் முடக்கும் வகையில், கையாலாகாத திமுக அரசு, திறனற்ற வகையில் செயல்பட்டதன் காரணமாக தொழில் துறை ஏற்கெனவே நலிவடைந்து ஸ்தம்பித்துள்ளது.

இதன் காரணமாக, தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோயம்புத்தூரிலும், பின்னலாடை நகரம் மற்றும் டாலர் சிட்டி என்று அழைக்கப்படும் திருப்பூரிலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளும், வியாபாரங்களும் மெதுவாக தமிழகத்தைவிட்டு ஏற்கெனவே 2022 முதல் வெளியேறத் துவங்கிவிட்டன.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2021, கொரோனா காலத்தில்கூட சிறப்பாக நடைபெற்று வந்த ஜவுளி மற்றும் பின்னலாடைத் தொழில்கள், தற்போதைய திமுக ஸ்டாலின் மாடல் ஃபெயிலியர் ஆட்சியில், கடுமையான வரி உயர்வு மற்றும் தொழில் கொள்கையால் தள்ளாடி வருகிறது.

திமுக ஸ்டாலின் மாடல் பெயிலியர் ஆட்சியில், தமிழ் நாடு கெட்டுக் குட்டிச் சுவரானதை மறைக்க, எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் மீது பழிபோடும் ஸ்டாலின், அமெரிக்காவின் தற்போதைய வரி உயர்வால் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூரின் ஏற்றுமதி தொழில் பாதிப்படைந்துள்ளதாக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்.

உண்மையில் இந்த தி.மு.கவின் 52 மாத கால ஆட்சியின் அலங்கோல செயல்பாடுகளால் கோவை, திருப்பூரில் பின்னலாடை, ஆயத்த ஆடை ஏற்றுமதி தொழில்கள் ஏற்கெனவே கடுமையாக பாதிப்படைந்துள்ளன என்பதே உண்மை.

அமெரிக்காவின் தற்போதைய கூடுதல் வரி விதிப்பால் நம் நாட்டில் பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியாளர்களுக்கு எந்த வித இடையூறும் ஏற்படாத வகையில், மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு அதிமுக சார்பில் அண்மையில் கடிதம் எழுதியுள்ளேன்.



மேலும், அக்கடிதத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும், தொழில் துறைக்கு நிவாரணம் அளிக்க கடன் மற்றும் அதற்கான வட்டியினை 6 மாதங்களுக்கு நிறுத்தி வைக்கவும் மற்றும் வட்டியை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுத்து தொழிலாளர்கள் வேலை இழப்பை தடுக்க நடவடிக்கை எடுக்கவும் பிரதமரை அவர்களை கேட்டுக்கொண்டுள்ளேன்.

அமெரிக்காவில் இந்தியப் பொருட்களை இறக்குமதி செய்பவர்கள் கூடுதல் வரி செலுத்த வேண்டும். இதனால், இந்திய பின்னலாடை அமெரிக்க சந்தையில் பிறநாட்டு ஜவுளிப் பொருட்களுடன் போட்டியிட முடியாமல் விற்பனை குறையும். எனினும் இங்கு, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தங்கு தடையில்லாமல் உற்பத்தியானால் தான் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும்; நாட்டுக்கும் அந்நியச் செலாவணி கிடைக்கும்.

ஆயத்த ஆடை தொழிலில் ஏற்பட்டுள்ள தொய்வைப் போக்க இந்த திமுக ஸ்டாலின் மாடல் ஃபெயிலியர் அரசு உடனடியாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# “மக்கள் பிரச்சினைக்காக அல்லாமல், தனது படம் ஓட பிரதமரை சந்தித்தவர் விஜய்”




மக்கள் பிரச்சினைக்காக அல்லாமல், தனது திரைப்படம் ஓட பிரதமரை சந்தித்தவர் விஜய் என கோவை துடியலூரில் நேற்று முன்தினம் இந்து முன்னணி சார்பில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில் திரைப்பட நடிகர் ரஞ்சித் ஆவேசமாக பேசினார்.

அவர் பேசியதாவது: நாம் சொந்த நாட்டிலேயே அகதிகளாக உள்ளோம். பொட்டு வைப்பது, சாமி கும்பிடுவதில் கூட பிரச்சினை உள்ளது. 100 முறை என்னை சங்கி என்று அழைக்கிறார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. எல்லா கடவுளும் ஒன்று தான். அதை வழிபடும் விதம் தான் வேறு.

சமீபத்தில் மதுரையில் நடந்த தவெக மாநாட்டில் பேசிய விஜய், ‘நான் உச்சத்தில் இருக்கும்போது வந்தவன், பிழைப்பு தேடி வரவில்லை’ என்று பேசியுள்ளார். பிரதமரை நோக்கி சொடக்கு போட்டு பேசுகிறார். இஸ்லாமிய மக்களுக்கு துரோகம் விளைவித்தார் பிரதமர் மோடி என்கிறார். ஆனால், இதே விஜய் கடந்த 2014ம் ஆண்டு ஏப்ரல் 16ம் தேதி கோவையில் பிரதமர் மோடியை சந்திப்பதற்காக பூனைக்குட்டியை போல் கையை கட்டி அமர்ந்திருந்தார்.

அப்போது விஜய் பிரதமரை சந்தித்தது எதற்காக?. கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தவா? மீனவர் பிரச்சினை குறித்து பேசவா? எதுவும் இல்லை. தன்னுடைய தலைவா என்ற படம் ஓடுவதற்காக பிரதமரை பார்த்துவிட்டு, இப்போது பிரதமரை பார்த்து சொடக்கு போட்டு பேசுகிறார்.

அமெரிக்காவே வியந்து பார்க்கும் ஒரே பிரதமர் மோடி. அவரைப் பார்த்து கைநீட்டி, சொடக்கு போட்டு பேச அருகதை வேண்டும். தமிழக முதல்வரை அங்கிள் என்றும், பிரதமரை மிஸ்டர் என்றும் குறிப்பிடுகிறார். இதுதான் அரசியல் நாகரிகமா? எனக்கு வரும் கோபத்துக்கு ஓங்கி குத்த வேண்டும் எனத் தோன்றுகிறது. அதை நாம் ஓங்கி ஒட்டாக குத்துவோம். இவ்வாறு அவர் பேசினார்.

# விநாயகர் சதுர்த்தியின் வரலாறு தெரியுமா?..




இந்து மதத்தில் மிகவும் பிரபலமான விழாக்களில் ஒன்றான விநாயகர் சதுர்த்தி ஆண்டுதோறும் ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி அன்று கொண்டாடப்படுகிறது. விநாயகர் எனும் அறிவின் தெய்வத்தை வழிபடும் இந்த விழா, ஒவ்வொரு தனிநபர் மற்றும் சமுதாய நலனை உண்டாக்கும் ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவின் வரலாறு பண்டைய காலத்தினுடையது என்றாலும், இன்று நாம் கொண்டாடும் விநாயகர் சதுர்த்தி காலப்போக்கில் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. இந்தப் பதிவில் விநாயகர் சதுர்த்தியின் வரலாறு, அதன் பின்னணி மற்றும் இன்றைய கொண்டாட்டங்கள் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

விநாயகரின் தோற்றம் மற்றும்

புராணங்கள்: விநாயகரின் தோற்றம் பற்றிய பல்வேறு புராணக் கதைகள் உள்ளன. அதில் மிகவும் பிரபலமான கதை, பார்வதி தேவி செய்த களிமண் சிற்பத்தால் உருவான ஒரு சிறுவன் விநாயகராக உருவாக்கியதைப் பற்றியது. ஒருமுறை பார்வதி தேவி களிமண்ணை கொண்டு ஒரு சிற்பத்தை வடித்தார். அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்ததால், அதற்கு உயிர் கொடுத்து தன் பிள்ளையாக மாற்றினார். அந்த சிற்பம் செய்யும் போது கையில் களிமண் பட்டுவிட்டதால், தன் பிள்ளை யிடம் யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என சொல்லிவிட்டு குளிக்கச் சென்றுவிட்டார்.

அப்போது சிவபெருமான் உள்ளே நுழைய முயற்சித்தபோது, சிறுவன் சிவபெருமானைத் தடுக்கவே, கோபமுற்ற சிவபெருமான் சிறுவனின் தலையைத் துண்டித்தார். பின்னர், பார்வதி தேவி வந்து நடந்ததைக் கூறி, சிறுவனுக்கு இன்னொரு தலையை ஏற்பாடு செய்யும்படி கட்டளையிட்டார். சிவபெருமானும், தன் பக்தர்களிடம் அவர்கள் முதலில் பார்க்கும் ஜீவ ராசியின் தலையை எடுத்து வரும்படி கூறினார். அவர்கள் முதலில் பார்த்த யானையின் தலையை எடுத்து வந்து சிறுவனின் உடலில் பொருத்தினர். இவ்வாறுதான் விநாயகருக்கு யானை முகம் கிடைத்தது.

விநாயகர் சதுர்த்தி வரலாறு: விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தின் வரலாறு மிகவும் நீண்டது. இது மராட்டிய மன்னன் சத்திரபதி சிவாஜி காலத்தில் இருந்தே கொண்டாடப்பட்டு வந்தாலும், பாலகங்காதர திலகர் இதை ஒரு தேசிய விழாவாக மாற்றியமைத்தார். இவர் பிரிட்டிஷ் ஆட்சியின்போது தேசிய உணர்வை வளர்ப்பதற்காக இந்த விழாவைப் பயன்படுத்தினார். அவர் விநாயகர் சதுர்த்தியை ஒரு சமூக நிகழ்வாக மாற்றி மக்களை ஒன்று திரட்டினர்.

விநாயகர் சதுர்த்தி என்பது வெறும் மத விழா மட்டுமல்ல, இது சமூக ஒருமைப்பாடு, கலாச்சார பரிமாற்றம் மற்றும் சமூக சேவை ஆகியவற்றை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்வாகும். இந்த விழாவின்போது மக்கள் தங்கள்



வீடுகளில், பொது இடங்களில் விநாயகர் சிலைகளை நிறுவி வழிபடுவார்கள். விழாவின் கடைசி நாளில் சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நீர்நிலைகளில் கரைக்கப்படும். இந்த நிகழ்வு இயற்கையுடன் நமது தொடர்பை நினைவுபடுத்துகிறது.

இன்று விநாயகர் சதுர்த்தி இந்தியா முழுவதும் விமர்சையாக கொண்டாடப்படுகிறது. விழாவின்போது பல்வேறு கலை நிகழ்ச்சிகள், கொண்டாட்டங்கள், சமூக சேவை நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. விநாயகர் சிலைகள் பல்வேறு அளவுகளில், வடிவங்களில் தயாரிக்கப்படுகின்றன. சிலைகள் பொதுவாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களாலேயே தயாரிப்பதால், அவை இயற்கை அமைப்புக்கு எவ்விதமான பாதகத்தையும் விளைவிப்பதில்லை.

அனைவருக்கும் இனிய விநாயகர் சதுர்த்தி நல்வாழ்த்துக்கள்!

# “மக்கள் நலன் காக்க ஒரே தீர்வு... அதிமுக ஒன்றுபட வேண்டும்!”



தமிழக மக்களின் நலன் காக்க ஒன்றுப்ட அதிமுக தான் ஒரே தீர்வு என்று சசிகலா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சியினரும் பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு ஒளிர்ந்த நம் இயக்கம், இன்றைக்கு ஏளனமாக பேசும் அளவுக்கு இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகிய இரு பெரும் தலைவர்கள் இல்லாத நிலையில் இன்று கட்சி பெரும் சோதனைக்கு ஆளாகி உள்ளது. கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள், விலகி இருப்பவர்கள் என அனைவரும் கரம் கோர்த்து ஒன்றிணைந்து எதிரியை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

நம் மனமாச்சர்யங்களை மறந்து, கருத்து வேறுபாடுகளை கடந்து கட்சி, கட்சியின் நலன், கட்சியின் எதிர்காலம், கட்சியின் வெற்றி முக்கியம், அந்த வெற்றி திமுக என்ற தீய சக்தியை வரும் தேர்தலில் வீழ்த்துவதாக அமைவது மிக முக்கியம் என்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டிய முக்கிய தருணம் இது.

எந்த திமுகவை ஆட்சி அதிகாரத்திலிருந்தும், அரசியல் களத்திலிருந்தும் அப்புறப்படுத்த வேண்டும் என்று எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் பாடுபட்டார்களோ, அந்த திமுக மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கக்கூடிய சூழலை நாம் உருவாக்கி விடக்கூடாது.

எனக்கு நம் கட்சியினர் யார் மீதும் எந்தவித கோபமோ, வருத்தமோ இல்லை. உங்களில் ஒருத்தியாக, உங்களின் சகோதரியாக இருந்து அனைவருடன் ஒன்றிணைந்து கழகப் பணியாற்றவே நான் விரும்புகிறேன். கட்சி தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து வருகிறது. இதை இப்படியே இனியும் வேடிக்கை பார்ப்பது நம் இருபெரும் தலைவர்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகிவிடும்.

மேலும், தமிழக மக்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய அநீதியாகிவிடும். எனவே, தமிழக மக்கள் நலன் காக்க ஒன்றுபட்ட, வலிமை மிக்க அதிமுக தான் ஒரே தீர்வு. அதைத்தான் அனைவரும் விரும்புகின்றனர்” என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தெருநாய் வழக்கால் உலகம் முழுக்க பிரபலமாகி விட்டேன்: உச்ச நீதிமன்ற நீதிபதி நகைச்சுவை பேச்சு

டெல்லி என்சிஆர் பகுதிகளில் தெரு நாய்களால் பலர் பாதிக்கப்படுவதாகவும், குறிப்பாக குழந்தைகள் தெருநாய் கடியில் உயிரிழப்பதாகவும் புகார்கள் எழுந்தன.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற 2 நீதிபதிகள் அமர்வு, ‘‘டெல்லி என்சிஆர் பகுதிகளில் தெரு நாய்களை பிடித்து காப்பகங்களில் பராமரிக்க வேண்டும். அவற்றை மீண்டும் தெருக்களில் விடக் கூடாது’’ என்று கடந்த ஆகஸ்ட் 11ம் தேதி உத்தரவிட்டது.



இதற்கு செல்லப் பிராணிகள் வளர்ப்பவர்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கண்டனம் தெரிவித்து போராட்டங்கள் நடத்தினர். நாடு முழுவதும் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையானது. இது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கவாய் கவனத்துக்கு சென்றது. இதையடுத்து நீதிபதி விக்ரம் நாத் தலைமையில் 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு வழக்கை மாற்றி தலைமை நீதிபதி கவாய் உத்தரவிட்டார்.

இந்த வழக்கை விசாரித்து கடந்த ஆகஸ்ட் 22ம் தேதி நீதிபதி விக்ரம் நாத் வெளியிட்ட தீர்ப்பில், ‘‘டெல்லி என்சிஆர் பகுதிகளில் பிடிக்கப்பட்ட நாய்களுக்கு தடுப்பூசி போட்டு பிடித்து இடங்களிலேயே விட வேண்டும். தெரு நாய்களுக்கு பொதுமக்கள் பொது இடங்களில் கண்டிப்பாக உணவளிக்க கூடாது. தெரு நாய்களுக்கு உணவளிக்க தனி இடத்தை மாநகராட்சி ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கு ‘நாய்களுக்கு உணவளிக்கும் இடம்’ என்ற அறிவிப்பு பலகைகளை வைக்க வேண்டும்’’ என்று உத்தரவிட்டார். இந்த தீர்ப்பை ஏராளமானோர் வரவேற்றனர்.

இந்நிலையில், கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உச்ச நீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத் நேற்று முன்தினம் பங்கேற்று பேசியதாவது:

தெரு நாய்கள் தொடர்பான வழக்கை விசாரித்தன் மூலம், இந்தியாவில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும் நான் பிரபலமாகி இருக்கிறேன். எதிர்பாராத விதமாக நான் பிரபலமாகி இருக்கிறேன். பலரும் எனக்கு பாராட்டு தெரிவித்தனர். நீதித் துறையில் நான் பணியாற்றி வருவது இந்த துறையில் இருப்பவர்களுக்கு தெரியும். ஆனால், இன்று பரவலாக அறியப்பட்டிருக்கிறேன். இதற்காக தெரு நாய்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வழக்கை எனது அமர்வுக்கு ஒதுக்கிய தலைமை நீதிபதி கவாய்க்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வெளிநாடுகளில் இருந்து எனக்கு பாராட்டு தெரிவித்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நீதிபதி விக்ரம்நாத் நகைச்சுவையாக பேசினார்.

வரும் 2027ம் ஆண்டு பிப்ரவரி மாதம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக விக்ரம் நாத் பொறுப்பேற்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

# போடி தொகுதியில் களமிறங்க ஆர்வம் காட்டும் அதிமுகக்காரர்கள்..



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொகுதியான போடிநாயக்கனூரில் அதிமுக சார்பாக போட்டியிட ஓபிஎஸ் தரப்பால் வளர்த்துவிடப்பட்டவர்கள் தீவிரமாக இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.போடி சட்டமன்றத் தொகுதி என்னதான் ஓபிஎஸ் தொடர் வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், இரட்டை இலையின் செல்வாக்கு அதிகம் என்பதால், ஓபிஎஸ் ஆதரவாளர்களாக இருந்தவர்களும் கூட எடப்பாடி பழனிசாமியிடம் பேசி வருவதாக கூறப்படுகிறது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா இருந்த போது, தென் மாவட்டங்கள் அதிமுகவின் கோட்டையாக இருந்தது. எந்த வேட்பாளர் நிறுத்தப்பட்டாலும், இரட்டை இலை சின்னத்திற்கு தனி செல்வாக்கு இருந்தது. ஆனால் ஜெயலலிதா மறைவுக்கு பின் தென் மாவட்டங்களில் அதிமுக தனது பிடியை தளர்த்திவிட்டது. இதனை பயன்படுத்தி திமுக தீவிரமாக பணியாற்றி வருகிறது.

ஆனால் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொடர்ச்சியாக போடி சட்டமன்றத் தொகுதியில் எம்எல்ஏவாக இருந்து வருகிறார். இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு தொடர்ச்சியாக வென்ற ஓபிஎஸ், இம்முறை போடி தொகுதியில் போட்டியிடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட பின், கட்சியைக் கைப்பற்றுவதிலேயே ஓபிஎஸ் தீவிரமாக இருந்தார்.

அதேபோல் பாஜக உடன் நெருக்கம் காட்டி வந்தாலும், தற்போது என்டிஏ கூட்டணியில் இருந்து வெளியேறி

# மீண்டும் ராமநாதபுரம் செல்லும் ஓபிஎஸ்




இருக்கிறார். சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்கள் மட்டுமே இருக்கும் நிலையில், போடி தொகுதியில் அதிமுக சார்பாக போட்டியிட ஓபிஎஸ் ஆதரவாளர்களாக இருந்த பலரும் காய்களை நகர்த்தி வருகின்றனர். அதில் பலரும் ஓபிஎஸ் தரப்பால் வளர்த்துவிடப்பட்டவர்கள்.

தேனி மாவட்ட அதிமுகவில் ஓபிஎஸ்க்கு வணக்கம் வைத்த பலரும், இன்று அவரை எதிர்க்க தயாராகி வருகின்றனர். 2024 லோக்சபா தேர்தலில் அதிமுக சார்பாக தேனி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த நாராயணசாமி போடி தொகுதியில் களமிறங்க ஆர்வம் காட்டி வருகிறார். அதேபோல் முன்னாள் எம்பி பார்த்திபன், முன்னாள் எம்எல்ஏ லட்சுமணன், போடி நகரச் செயலாளர் புருஷோத்தமன் தயாராகி வருகின்றனர்.

இது இப்படியிருக்க ஓபிஎஸ் எந்த கவலையும் இல்லாமல் இருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலின் போதே தேனியில் போட்டியிடாமல் முக்குலத்தோர் சமூக வாக்குகள் அதிகம் இருந்த ராமநாதபுரம் தொகுதியில் தான் ஓபிஎஸ் போட்டியிட்டார். இதனால் சட்டசபைத் தேர்தலின் போதும் ராமநாதபுரம் மாவட்டத்தில் போட்டியிட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல் தனது மகன் ஓ.பி.ரவீந்திரநாத் குமாரை போடி தொகுதியில் போட்டியிட வைக்க வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது. தென் மாவட்டங்களில் சுயேட்சையாக போட்டியிட்டு அப்பாவு, தாமரைக்னி உள்ளிட்டோர் வென்றிருக்கின்றனர். அதுபோல் ஓபிஎஸ் தனது செல்வாக்கை இம்முறை நிரூபித்துக் காட்டுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.



# மாநிலங்களவை சீட் தருவதாக உறுதி கூறிவிட்டு முதுகில் குத்திவிட்டார் எடப்பாடி பழனிசாமி

அதிமுக தேமுதிக கூட்டணி ஒப்பந்தத்தில் மாநிலங்களவை சீட் தருவதாகக் கூறி பழனிசாமி நம் முதுகில் குத்திவிட்டார் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா நிர்வாகிகள் மத்தியில் கடுமையாக விமர்சித்துள்ளார்.

சென்னையில் தேமுதிக தென்சென்னை வடக்கு மாவட்ட பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா பேசியதாவது:

செப்டம்பர் மாத இறுதிக்குள் பூத் கமிட்டி பணிகளை நிறைவு செய்ய வேண்டும். தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் கடினமாக உழைக்க வேண்டும். மேலும், அதிமுகவுடன் 2024 நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி அமைத்தபோது 5 மக்களவை தொகுதிகளும், 1 மாநிலங்கவையும் ஒதுக்குவதாக தெரிவித்தனர். ஆனால் அந்த சீட் நமக்கு கொடுக்கவில்

# அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியின் கூட்டங்களுக்கு காசு கொடுத்து ஆட்கள் வரவழைக்கப்படுகின்றனர் என்பது நான் சொல்லி தெரிய வேண்டியதில்லை.

லை. சீட் தருவதாக கூறி பழனிசாமி நம்மை முதுகில் குத்திவிட்டார். முதல்வராக இருந்தவர், கட்சி தலைவராக இருக்கிறார், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என

நம்பினோம். ஆனால் ஏமாற்றிவிட்டார்.

எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்தில் கூட்டணி குறித்த ஒப்பந்தத்தில் தேதி குறிப்பிட்டு கையெழுத்திடுவதில்லை, அதேபோலதான் தேமுதிகவுடன் கூட்டணி ஒப்பந்தத்தில் தேதி குறிப்பிட வேண்டாம் என இபிஎஸ் கேட்டார். அதனால் நம்பிக்கையின் பேரில் கையெழுத்திட்டோம். அதனால்தான் நாம் ஏமாந்துவிட்டோம். பழனிசாமியின் பிரச்சார கூட்டத்துக்கு காசு கொடுத்து தான் அழைத்து வருகிறார்கள். இவ்வாறு அவர் பேசினர்.



இந்தக் கூட்டத்தில் பேசிய தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ், “தேமுதிக எந்த கூட்டணியில் இடம்பெறுகிறதோ அந்த கூட்டணிதான் 2026 தேர்தலில் அமோக வெற்றி பெறும். சட்டப்பேரவையில் பிரேமலதா எனும் நான் என்ற குரல் 2026ல் ஒலிக்கபோவது உறுதி” என கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பிரேமலதா கூறியதாவது: இரண்டாம் கட்ட மக்கள் சந்திப்பு பயணம் செப்.5ம் தேதி திருவண்ணாமலையில் தொடங்கும். விஜயகாந்த்துக்கும், மூப்பனாருக்கும் 40 ஆண்டுகால நட்பு இருந்தது. எங்களது திருமணம் மூப்பனார் மற்றும் கருணாநிதி தலைமையில்தான் நடந்தது. அந்த அடிப்படையில்தான் நேற்று நடைபெற்ற நிகழ்வில் தேமுதிக கலந்துகொண்டது.

முதல்வரின் வெளிநாடு பயணம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள். அவரது பயணம் தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் விதத்தில் உபயோகமாக இருக்க வேண்டும். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியின் கூட்டங்களுக்கு காசு கொடுத்து ஆட்கள் வரவழைக்கப்படுகின்றனர் என்பது நான் சொல்லி தெரிய வேண்டியதில்லை. அனைத்து கட்சி கூட்டங்களுக்கும் காசு கொடுத்துதான் மக்களை அழைத்து வருகின்றனர். இதில் தேமுதிக விதிவிலக்கு. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# “அனிதா மரணத்தை அரசியலாக்கி திமுக ஆட்சிக்கு வந்தது”




பாமக சார்பில், ‘உரிமை மீட்க தலைமுறை காக்க’ என்ற தலைப்பில் பிரச்சார பயணம் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மற்றும் செஞ்சியில் நடைபெற்றது. பிரச்சார பயணத்துக்கு தலைமையேற்ற பாமக தலைவர் அன்புமணி சிறப்புரையாற்றினார். அப்போது அவர், ‘‘தமிழகத்தில் நடந்து வரும் திமுக ஆட்சி ஒரு கொடுங்கோல் ஆட்சி.

4 வயது சிறுமி முதல் 80 வயது மூதாட்டி வரையில் பாதுகாப்பு இல்லை. கட்சி, ஜாதி, மதம் என பார்க்காமல், பிள்ளைகள் மற்றும் நம் பேரப் பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு திமுக ஆட்சியை அகற்ற வேண்டும். போதை பழக்கத்துக்கு இளைஞர்கள் ஆளாகி உள்ளனர். திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இளைஞர்களை காப்பாற்ற முடியாது.

லட்சக்கணக்கான யூதர்களை கொலை செய்த ஹிட்லர் ஆட்சியை, ‘கொடுங்கோல் ஆட்சி’ என சொல்வார்கள். தமிழகத்தின் ஹிட்லரான ஸ்டாலின், 7 விவசாயிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்தார். ரவுடிகளை குண்டர் சட்டத்தில் கைது




செய்யும் நிலையில், நமக்கு சோறு போடும் விவசாயிகள் மீது ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சியில் குண்டர் சட்டம் போடப்பட்டது.

திமுக ஆட்சியை மறக்கவும், மன்னிக்கவும் கூடாது. திண்டிவனம் நகரம் முன் னேற்றம் அடையவில்லை. விரிவாக்கம், வசதி, வளர்ச்சியும் இல்லை. ஏரியில் பேருந்து நிலைய த்தை கட்டி உள்ளனர். ஏரியின் முக்கியத்துவம் தெரிய வில்லை. திண்டிவனம் பகுதியில் உள்ளசிப்காட்டில் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை கொடுக்க வில்லை என்றால், மூடிவிட்டு செல்லலாம்.

6 மாதங்களில் மாற்றம் வரும். நம்முடைய ஆட்சி ஏற்படும். கல்வி மற்றும் வேலை வாய்ப்புடன் சுய மரியாதையுடன் வாழ்வத ற்காக, வன்னியர்களுக்கு 10.5 சதவீதம் இல்லை, 15 சதவீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என கேட்கிறோம். உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும், உள் இட ஒதுக்கீடு வழங்காத ஸ்டாலின், வன்னியர்களின் துரோகி. அவருக்கு வன்னியர்கள் வாக்களிக்க மாட்டார்கள்.

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு அருகே ரூ.16 கோடியில் பாலம் கட்டப்பட்டது. 3 மாதங்களில் அடித்து செல்லப் பட்டது. தேர்தலுக்கு முன்பு 505 வாக்குறுதிகளை திமுக கொடுத்தது. அனிதா மரணத்தை வைத்து, நீட் தேர்வுக்கு எதிராக பேசி, திமுக ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வை ரத்து செய்துவிடுவோம் என அளித்த வாக்குறுதியை 4 ஆண்டு களாகியும் நிறைவேற்றவில்லை. 98 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டோம் என முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார்.

ஆனால், 13 சதவீத வாக்குறுதி மட்டும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாதாந்திர மின் கட்டணம், அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியம் என சொன்னார்கள். திமுக ஆட்சிக்கு வர பணியாற்றிய அரசு ஊழியர்கள், இப்போது வீதியில் போராடுகின்றனர். இவ்வளவு பொய் சொன்ன ஆட்சியை தமிழக மக்கள் பார்க்கவில்லை. பெண்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் துரோகம் செய்த திமுகவை விரட்டியடிக்க வேண்டும்'' என்றார்.திண்டிவனத்தில் நடைபயணம் மேற்கொண்ட பாமக தலைவர் அன்புமணி.

# 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்த வேண்டும்



**'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு முகாம்களை அதிக எண்ணிக்கையில் நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக உயர் அதிகாரிகளுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**

இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது: தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம், சென்னை நந்தனத்தில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று நடந்தது.

இதில் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் முன்னெடுப்புகளான கல்லூரிக் கனவு திட்டம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக், தொழிற்பயிற்சி நிலையங்களில் திறன் பயிற்சி வழங்குதல், ஸ்கவுட் திட்டம், தமிழ்நாடு திறன் போட்டிகள், நிரல் திருவிழா (Hackathon), தமிழ்நாடு மாநில அளவிலான வேலைவாய்ப்பு திட்டம் (TNSLPP), உயர்வுக்குப்படி திட்டம், நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் (குடிமைப்பணித் தேர்வு, ஊக்கத் தொகை திட்டம் மற்றும் எஸ் எஸ்சி, வங்கி பணியாளர் தேர்வு வாரிய போட்டித் தேர்வுகளுக்கான உறைவிடப் பயிற்சி ஆகியவற்றின் தற்போதைய முன்

னேற்றம் குறித்து துணை முதல்வர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் சிறப்பாக செயல்படும் கல்லூரிகளை தேர்ந்தெடுத்து ஊக்குவிக்க வேண்டும். 2026ல் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெறும் சர்வதேச திறன் போட்டிகளில் பங்கு பெறுவதற்கான தமிழக மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த தேவையான உயர்தர தொழில்நுட்ப பயிற்சியை வழங்க வேண்டும். நிரல் திருவிழா 2.0 மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை தொழில் முனைவோராக உருவாக்க வேண்டும்.

'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் நடைபெறும் வேலைவாய்ப்பு முகாம்களை அதிகப்படுத்தி அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் போட்டித் தேர்வுகள் பிரிவின்கீழ் அரசுப் பணிகளில் பணிவாய்ப்பு பெறுபவர்களின் தேர்ச்சி எண்ணிக்கையை அதிகப்படுத்த இலக்கு நிர்ணயித்து செயல்பட வேண்டும்.

விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கியவர்கள் அவர்கள் விரும்பும் வேலைவாய்ப்பை பெறும் வகையில் திறன் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை துணை முதல்வர் வழங்கினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை செயலர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண் இயக்குநர் கிராந்தி குமார் பாடி மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# திமுக வெளியிட்ட 505 வாக்குறுதிகளில் தமிழகம் முழுவதும் 404 தொலைநோக்கு திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன




திமுக தேர்தல் அறிக்கையில் வெளியிட்ட 505 வாக்குறுதிகளை தொலைநோக்கு திட்டங்களாக உருவாக்கி 404 திட்டங்களை பல்வேறு நிலைகளில் செயல்படுத்துவதுடன், அறிவிக்காத பல திட்டங்களையும் செயல்படுத்தி வருவதாக அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் தொலை நோக்குத் திட்டங்கள் குறித்து நேற்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது: முதல்வராக மு.க.ஸ்டாலின் கடந்த 2021ல் பொறுப்பேற்றபோது கரோனா பெருந்தொற்று, நிதி நெருக்கடி இருந்தன. நிதிப் பற்றாக்குறை 4.91 சதவீதமாகவும், வருவாய் பற்றாக்குறை 3.49 சதவீதமாகவும் இருந்தது.

மாநிலத்தில் உள்நாட்டு வருவாய் வளர்ச்சி 0.07 சதவீதமாக இருந்தது. இந்த நான்கரை ஆண்டுகளில், ஓராண்டு முழுவதும் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட நிலையில், மூன்றரை ஆண்டுகளில் அபரிதமான வளர்ச்சியை கொண்டு வந்திருக்கிறோம். மத்திய அரசின் நிதி பங்களிப்பு இல்லாமல் கூட பல்வேறு இயற்கை சீற்றங்களில் இருந்து தமிழகத்தை மீட்டெடுத்துள்ளோம்.

தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்ததை அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து அவற்றை தொலைநோக்கு திட்டங்களாக உருவாக்கி ஒப்புதல் அளிக்கப்பட்டது. உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 0.07 சதவீதமாக இருந்தது. 202425ம் ஆண்டில் இரட்டை இலக்கில் 11.19 சதவீதமாக வளர்ந்திருக்கிறோம். இது கடந்த 10 ஆண்டுகளில் தமிழகம் பெற்றுள்ள உச்சபட்ச வளர்ச்சியாகும். அதேபோல் ஆட்சி பொறுப்புக்கு வரும்போது 3.49 சதவீதமாக இருந்த வரு

வாய் பற்றாக்குறை இப்போது 1.17 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

நிதிப் பற்றாக்குறையை 4.91 சதவீதத்தில் இருந்து 3 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் இதுவரை ரூ.10.28 லட்சம் கோடி தொழில் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். இதன்வாயிலாக, 32.23 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் பெற வழி ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு வழங்கியுள்ள சமூக வளர்ச்சி குறியீடுகளில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. அறிவித்த திட்டங்கள்தவிர, சொல்லாத பல திட்டங்களையும் நிறைவேற்றி வந்திருக்கிறோம் திமுக ஆட்சிப்பொறுப்புக்கு வரும் முன் 505 தேர்தல் வாக்குறுதிகள் கொடுத்திருந்தோம்.

இதில் 364 திட்டங்களுக்கு அரசு ஆணைகள் வெளியிடப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பரிசீலனையில் இப்போது 40 திட்டங்கள் உள்ளன. மத்திய அரசிடம் நிலுவையில் உள்ள திட்டங்களும் இருக்கின்றன. நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படாத 64 திட்டங்களும் உள்ளன.

இவைதவிர, கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், இல்லம் தேடி கல்வி, காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், முதல்வர் மருந்தகம், பாதம் காப்போம், கலைஞரின் கனவு இல்லம் திட்டம், வடசென்னை வளர்ச்சித்திட்டம், உங்களுடன் ஸ்டாலின் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு தெரிவித்தார். உடன் அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி.செழியன் ஆகியோர் இருந்தனர்.



■ திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்களின் ஆய்வு கூட்டத்தில் அமைச்சரும் வடக்கு மண்டல பொறுப்பாளருமான மாண்புமிகு எ.வ.வேலு 02925 அன்று கலந்துக்கொண்டு ஆய்வு மேற்கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் கழக மருத்துவரணி துணை தலைவரும் போளூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான டாக்டர் எ.வ.வே.கம்பன் உள்ளிட்ட கழக முன்னோடிகள்.



# டெல்டாவில் சுற்றுப்பயணம் தொடங்க விஜய் திட்டம்

**தவெக தலைவர் விஜய், தனது சுற்றுப்பயணத்தை டெல்டா மாவட்டத்தில் இருந்து தொடங்க திட்டமிட்டுள்ளார். அவருக்காக நவீன வசதிகளுடன் பிரச்சார வாகனம் தயார் செய்யப்பட்டுள்ளது.**

தவெக தலைவர் விஜய், அண்மையில் மதுரையில் பிரம்மாண்ட மாநாட்டை நடத்தி முடித்தார். இதைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். தவெகவின் இரண்டு மாநாடுகளையும் வட மற்றும் தென் மாவட்டங்களில் நடத்திய நிலையில், தனது சுற்றுப்பயணத்தை செப்டம்பர் 2வது வாரத்தில் டெல்டா மாவட்டங்களில் இருந்து தொடங்க விஜய் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அவரது சுற்றுப்பயணத்துக்கான

# விஜய்க்காக நவீன வசதிகளுடன் தயாராகும் பிரச்சார வாகனம்



ஏற்பாடுகளை தவெக பொதுச் செய லாளர் ஆனந்த் மேற்கொண்டு வரு கிறார். இந்நிலையில், விஜய்யின் சுற் றுப்பயணத்துக்காக பல்வேறு வசதிகளு டன் கூடிய நவீன பிரச்சார வாகனம் பனையூரில் உள்ள கட்சி அலுவலகத் தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அந்த வாகனத்தில் விஜய்யின் புகைப் படம் மற்றும் கட்சியின் கொள்கைகள் தொடர்பான வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களை ஒட்டும் பணிகள் தொடங் கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

தொழில் பாதுகாப்பு: இதனிடையே விஜய் வெளியிட்டுள்ள அறிக்கை : அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால், தமிழக ஏற்றுமதியாளர் கள் மீள முடியாத அளவுக்கு மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகி உள் ளனர். அவர்களுடன் தவெக எப்போதும் துணை நிற்கும். மேலும், தொழில் மற்றும் வேலை வாய்ப்பை பாதுகாப் பதற்காக மத்திய, மாநில அரசுகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொருளாதாரப் பாதுகாப்பு நடவடிக் கைகளை துரிதமாக முன்னெடுத்து தமிழக ஏற்றுமதியாளர்களையும், ஏற் றுமதி சார்ந்த தொழில்களையும் தொழிலாளர்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# மரங்கள், மாடுகள், தண்ணீருக்கு மாநாடு: சீமானின் வியூகம் வெல்லுமா?

2026 தேர்தலுக்கு ஒவ்வொரு கட்சியும் படு வேகமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது. தேர்தல் வியூகங்களால் பேர வலிமையை அதிக மாக்க முடியுமா என ஒவ்வொரு கட்சியும் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கும் சமயத்தில், சீமான் ஆடு மாடுகள், மரங்களுக்காக மாநாடு போட்டுக் கொண்டிருக்கிறார். தேர்தலுக்கு நாதகவின் வியூகம்தான் என்ன?

கட்சி தொடங்கியது முதல் இப்போதுவரை சீமான் இரண்டு விஷயத்தில் தெளிவாக இருக்கிறார். ஒன்று தமிழ்த் தேசியம், மற்றொன்று தனித்துப் போட்டி. 2016 சட்டப்பேரவை தேர்தலில் 1.1 சதவீத வாக்குகளுடன் தொடங்கிய நாம் தமிழர் கட்சியின் பயணம், 2024 மக்களவைத் தேர்தலில் 8.2 சதவீதம் ஆனது. இதனால் இப்போது அங்கீகரி க்கப்பட்ட மாநிலக் கட்சியாகவும் மாறியுள்ளது நாதக.

தேர்தலுக்குத் தேர்தல் வாக்கு சதவீத அடிப்ப டையில் வளர்ச்சியைக் கண்டாலும், இதுவரை ஒரு தொகுதியில் கூட நாதக வென்றதில்லை என்ற விமர்சனங்களும் அதிகமாகி உள்ளது. ஆனாலும் கூட, சமசரமும் இல்லை, கூட்டணியும் இல்லை என 2026 தேர்தலுக்கு சுமார் 100 வேட்பாளர்களை அறிவித்துவிட்டார் சீமான்.

தொடக்கத்தில் விஜய்யோடு கூட்டணி வைக்கும் எண்ணத்தோடு பேசி வந்த சீமான், பெரியார் விவகாரத்தால் தவெகவை கடுமையாக எதிர்க்க ஆரம்பித்தார். இப்போது இணையத்தில் நாதக, தவெகவினர் இடையேயான யுத்தம் சூடு பறக்கிறது. இப்படி அரசியல் களமே அனல் பறக்கும்

வேளையில்தான், தனி ரூட்டில் ஆடு மாடுகள், மரங்கள், மலைகள், தண்ணீருக்கு மாநாடு நடத்திக்கொண்டிருக்கிறார் சீமான்.

சீமானின் வியூகம் என்ன? தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளில் சீமா னின் வாக்கு வங்கி தனித் துவமானது. ஏனென்றால், சீமான் பிரபல நடிகரும் அல்ல, பெரிய அரசியல் பின்புலம் கொண்டவரும் அல்ல. இன்னும் சொல்லப்போனால் தேர்தல் செலவுகளுக்கு கூட அவர்களிடம் பெரிதாக நிதியில்லை. இருப்பினும் 8.2 சதவீத வாக்குகள், அதாவது சுமார் 36 லட்சம் பேர் சீமானுக்கு வாக்களித்துள்ளனர்.

சீமானின் வாக்காள ர்களில் பெரும்பாலானோர் இளையோர். அதேபோல, தமிழ்த் தேசியம், சுற்றுச்சூழல், இயற்கை, தமிழர் தொன்மம் எனும் கொள்கை கொண்டோர் நாதகவில் அதிகம் உள்ளனர். இவர்கள்தான் அக்கட்சியின் நிலைத்த வாக்கு வங்கி. இயற்கை, பல்லுயிரியம் பற்றி சீமான் பேசும் பல வீடியோக்கள் அவ்வப்போது வைரலாகும்.

விஜய்யின் அரசியல் வருகை, சினிமா பாசம் கொண்ட இளையோர் மற்றும் பொதுத்தளத்தில் ஒரு சலசலப்பை உருவாக்கி யுள்ளது. இது எல்லா கட்சிகளுக்கும் சேதாரம் உண்டாக்குவதைப் போல, நாதக வாக்கு வங்கிக்கும் பாதகத்தை உருவாக்கலாம் என்ற பேச்சு உள்ளது.

எனவேதான், தனது ‘முதன்மை வாக்கு வங்கி’யான தமிழ்த் தேசியம், இயற்கை சூழலியல் வாக்குகளை உறுதிப்படுத்த இரு உத்திகளை கையில் எடுத்துள்ளார். தமிழ்த் தேசியத்துக்கு பெரியார், திமுக எதிர்ப்பை வலுவாக்கி வருகிறார். மற்றொரு புறம் அறிவுசார், சூழலியல் தளத்தில் உள்ள வாக்குகளை வலுப்படுத்த மரங்கள், ஆடு மாடுகள், மலைகள், தண்ணீருக்கான மாநாடுகளை நடத்தி வருகிறார்.

சில கட்சிகளால் விமர்சிக்கப்பட்டாலும், சீமானின் ஆதரவுத் தளம் மட்டுமின்றி பொதுத் தளத்திலும், நாதகவின் ஆடு மாடுகளுக்கான மாநாடு, மாடு மேய்க்கும் போராட்டம், மரங்களின் மாநாட்டுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

வாக்கு அரசியல், எதிர்ப்பு அரசியலுக்கு மத்தியில் சூழலியல் சார்ந்த போராட்டங்களை சீமான் முன்னெடுப்பது, மாற்றம் விரும்புவோர் மத்தியில் நல்ல இமேஜை உருவாக்கியிருப்பதையும் பார்க்க முடிகிறது.

மாடுகள் முன்பு சீமான் பேசியது முதலில் விமர்சிக்கப்பட்டது, மேய்ச்சல் உரிமை சார்ந்த முன்னெடுப்பு என அது மாறியபோது விமர்சனங்கள் அடங்கின. மரங்களோடு சீமான் பேசியதை வைரலாக்கி விமர்சித்தார்கள். அதே கருத்தை நடிகர் சூர்யா பேசியதை பரப்பி பதிலடி கொடுத்தார்கள் தம்பிகள்.

இன்னொரு கோணத்தில் பார்த்தால், ஆடு மாடுகள் வளர்ப்பு, மரங்கள் வளர்ப்பு, மலை சார்ந்த வாழ்க்கை, தண்ணீர் சார்ந்த தொழில் என ஒவ்வொன்றும் சில சமூகங்களோடு தொடர் புடையது. எனவே இது சார்ந்த வாக்குகளுக்கும் சீமான் குறிவைக்கிறார் என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். இந்த கணக்கில்தான் பனையேறி கள் இறக்கும் போராட்ட த்தையும், நெசவாளர் வாழ்வுரிமை மாநாட்டையும் சீமான் சமீபத்தில் நடத்தினார்.

தேர்தல் நெருக்கத்தில் வேளாண்மை, மீன்பிடித் தொழில், தமிழ் வணிகர்கள் பாதுகாப்பு என பல்வேறு சமூகங்களை குறிவைக்கும் வகையிலான மாநாடுகளுக்கும் நாதக திட்டமிட்டுள்ளது.

பல்வேறு அரசியல் கட்சிகளும் கூட்டணி, கூடுதல் தொகுதிகள், கூடுதல் நிதி என பேரம் பேசிக்கொண்டிருக்கும் சூழலில், தனி ரூட்டில் சீமான் பயணிக்கிறார். எப்படி பார்த்தாலும் மாடுகள், மரங்கள், மலைகள் என வித்தியாசமான மாநாடுகளால் சமூக ஊடகங்களிலும் , அரசியல் களத்திலும் எப்போதும் லைம் லைட்டிலேயே இருக்கிறார் சீமான். இது வாக்குகளாக மாறுமா என தேர்தலின் போதுதான் தெரியும்

# முற்றுகிறதா எடப்பாடியுடனான மோதல்? செப்.5ல் மனம் திறக்கப் போவதாக செங்கோட்டையன் தகவல்



செப்.5ம் தேதி மனம் திறந்து பேசப் போகிறேன் என்று அதிமுக மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கும், பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் இடையே கடந்த சில மாதங்களாகவே கருத்து மோதல் இருந்து வருகிறது. இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் அத்திக்கடவு அவிநாசி திட்டம் நிறைவேற்றியதற்காக இபிஎஸ்க்கு பாராட்டு விழா நடைபெற்றது. அன்னூரில் நடந்த அந்தப் பாராட்டு விழாவில், மேடையில் மறைந்த முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதாவின் புகைப்படங்கள் இல்லை என்று எதிர்ப்புக் குரல் எழுப்பினார் செங்கோட்டையன்.


அதன் பின்னர் பல்வேறு தருணங்களிலும் அவர் இபிஎஸ் மீதான அதிரு ப்தியை வெளிப் படுத்தி வந்தார். இதற்கெல்லாம் முத்தாய் ப்பாக, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' பிரச்சாரப் பேரணியை இபிஎஸ் மேட்டுப்பாளையத்தில் இருந்து தொடங்கினார். அவர் இதற்காக கோபி வழியாகவே மேட்டுப் பாளையம் சென்றார். ஆனால், கோபி எல்லையில் இபிஎஸ்க்கு செங்கோ ட்டையன் வரவேற்பு அளிக்கவில்லை. கட்சியின் பொதுச் செயலாளரை ஒரு மூத்த தலைவர், முன்னாள் அமைச்சர் இவ்வாறாக புறக்கணித்தது சர்ச்சையைக் கிளப்பி யுள்ளது.

இந்நிலையில், வெள்ளக்கோயிலில் ஒரு திருமண நிகழ்வில் செங்கோட்டையன் நேற்று பங்கேற்றார். அப்போது கட்சி நிர்வாகிகளுடனும் ஆலோசித்ததாக தகவல். தொடர்ந்து இன்றும் அவர் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோச னையில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில், இன்று காலை செய்தியாளர்களை சந்தித்த செங்கோட்டையன், "ஈரோடு மாவட்டம் கோபியில் கட்சி அலுவல கத்தில் வருகிற 5ம் தேதி காலை 9 மணி அளவில் செய்தியாளர்களை சந்தித்து, மனம் திறந்து பேச உள்ளேன். அதுவரை செய்தியாளர்கள் பொறுமை காக்க வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார்.

கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டமா? என்ற கேள்விக்கு செய்தியாளர்கள் சந்திப்பு உள்ளது என்று மட்டும் தெரிவித்த செங்கோட்டையன், எடப்பாடி பழனிசாமி மீதான அதிருப்தி தொடர்கிறதா? என்ற கேள்விக்கு சிரித்து முகத்துடன் கையெடுத்து கும்பிட்டுச் சென்றார். அவரின் அறிவிப்பும், சூசக சிரிப்பும் அதிமுக வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

Printed by A.MOURIYAN and Published by A.MOURIYAN on behalf of ARUNAI MURASU Tamil Monthly and Printed at J.M. PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.
And Published at No.7/13, Ponmanachemmal Street, M.G.R Nagar, Kalaignar Karunanidhi Nagar, Chennai - 600078. Editor: A.MOURIYAN.


SPACE INTERIORS
FILL YOUR DESIRE TO PERFFCT HOME
◆Modular Kitchen
◆Wardrobe
◆TV Unit
◆Pooja Unit
◆Painting
◆Mosquito Netlon
◆Furniture works
◆False Ceiling
◆PVC Doors
E.Rajesh Kannan DCE
98848 65683
spaceinteriors16@gmail.com
www.spaceinteriors16.com
#13/29, Mavadi Vinayagar Kovil St.. Royapettah, Chennai-600014


தண்டு
வடத்தில் வலியா ?
முதுகு வலி, மூட்டு வலி, கழுத்து வலி
போன்றவற்றுக்கு நிரந்தர தீர்வு
அனைத்து சிகிச்சை முறைகளும் அக்கு பஞ்சர் முறையாக
படித்து பயிற்சி பெற்ற சிகிச்சையாளர்களை
கொண்டு வழுங்கப்படுகிறது.
GLOW HEALING
GLOW ACUPUNCTURE
SIDDHA • VARMA • AYURVEDA
C A S M A
GLOW ACUPUNTURE CENTRE
CLASSICAL ACUPUNCTURE SCIENCE MEDICAL ASSOCIATION
SIDDHA - VARMA - AYURVEDA BEST SPINAL CURE & HEALING CENTRE
நோய்களுக்கு ஏற்ப
சித்தா, வர்மா, ஆயுர்வேத முறைப்படி பாரம்பரிய
கூட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும்
அக்குபஞ்சர்
வலி நிவாரண சிகிச்சை
HERNIATED DISC
SLIPPED DISC
BULGING DISC
SCIATICA SPINAL STENOSIS
DEGENERATIVE DISC DISEASE
Prof. Hr. SIVAYOGI MOURIYAN
B.A., M.(Acu) M.D.(Acu)
Cell : 98404 82245
Time : 10.30 am - 12.30 am / 4.00 pm - 7.30 pm
No. 6/56, Annamalai Nagar 1st Street, West Mambalam, Chennai - 600 033.